செ.வெ.எண்.364 நாள்.06.06.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உலக எச்.ஐ.வி. தடுப்பூசி விழிப்புணர்வு நாள் மற்றும் எய்ட்ஸால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி அனுசரித்தல் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பில் உலக எச்.ஐ.வி. தடுப்பூசி விழிப்புணர்வு நாள் மற்றும் எய்ட்ஸால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி அனுசரித்தல் நிகழ்ச்சி இன்று (06.06.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உலக எச்.ஐ.வி தடுப்பூசி விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், எய்ட்ஸால் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் எச்.ஐ.வி. உள்ளோர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு இலவச பரிசோதனை மற்றும் சிறந்த சிகிச்சைகள் வழங்கிட தமிழக அரசு 2038 நம்பிக்கை மையங்கள், 55 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள், 173 இணைப்பு கூட்டு மருந்து சிகிச்சை மையம் மற்றும் 16 கட்டணமில்லா சட்ட உதவி மையங்கள் ஆகியவை செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு எச்.ஐ.வி.–யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டஉழவர்களுக்கு உதவிடும் வகையில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/– ஒய்வூதியம் வழங்கும் திட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் இத்திட்டத்தின் கீழ் எச்.ஐ.வி. தொற்றுள்ள மக்கள் சுமார் 297 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/– ஒய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள வைப்பு நிதி வட்டியிலிருந்து எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் தொற்று பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்திற்காகவும், கல்விக்காகாவும், மருத்துவத்திற்காகவும் ஆண்டு தோறும் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் பொது சுகாதாரத் துறை இணை இயக்குநர் மரு.இளங்கோ, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் மரு.ரேவதி, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அமைப்பு மாவட்ட திட்ட மேலாளர் மரு.ஜான் ஜூடு ஜோஸ்வா, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அமைப்பு மாவட்ட மேற்பார்வையாளர் திரு.ம.ஜெயகுமார், மாவட்ட சுகாதார கல்வி அலுவலர் திரு.அப்துல்காதர் மற்றும் அலுவலர்கள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.